**ஹக்மன பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

-----------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 ஜூலை 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, ஹக்மன பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மூலதன செலவுகள் ரூபா 5,818,142 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான 16 நிர்மாண வேலைகளுக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடு மிகையாகவும், 02 நிர்மாண வேலைகளுக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தமையால் தேறிய கடன் கொடுத்தோர் ஏற்பாடு ரூபா 1,887,447 இனால் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(இ) முன்னைய ஆண்டுகள் தொடர்பாக 11 அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக செலுத்த வேண்டியிருந்த ரூபா 952,336 இற்கான கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் நிர்மாணிக்கும் நிர்மாண வேலை தொடர்பாக பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய ரூபா 8,123,222 தொகை நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) முன்னைய ஆண்டுகளுக்கான 02 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக பெற வேண்டிய தொகை ரூபா 1,962,387 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) தகனசாலை கட்டிடத்தின் ரூபா 7,650,000 தொகைக்காக புதிய பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்குகளில் காட்டும் போது முந்தி பெறமதி மதிப்பீட்டு பெறுமதியை இனங்கண்டு கணக்குகளில் இருந்து அகற்றியிருக்கவில்லை.

(எ) ரூபா 200,000 தொகை பெறுமதியான இரண்டு காணிகள் நிலையான சொத்துக்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 1,901,449 தொகைக்கான நிலையான சொத்துக்கள் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஐ) சபைக்கு சொந்தமான காணி ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பல கரும கட்டிடத்தின் பெறுமதி மற்றும் சபைக்கு கிடைத்திருந்த காணி ஒன்றின் பெறுமதி ஆகியவற்றை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு எடுத்திருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக்கூற்றுக்கள் காணப்படுகின்ற 18 கணக்கு விடயங்களின் ரூபா 20,506,233 தொகை தொடர்பான மீதிகள் மற்றும் துணைப் பதிவேடு / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 6,666,045 தொகையாகும்.

**1.3.3 தொங்கல் கணக்கு**

தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் தொடர்ச்சியாக கணக்குகளில் முன் கொண்டு வந்து காணப்படும் தொங்கல் கணக்கில் காணப்பட்ட ரூபா 873,211 இற்கான வரவு மீதியை இனங்கண்டு உரிய சீராக்கல்கள் மேற்கொண்டு கணக்குகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதி ரூபா 14,873,739 ஆக இருந்ததுடன், அம்மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 4,721,448 இற்கான 91 மீதிகளும் உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகள் முதல் தீர்க்கப்படாமல் முன் கொண்டுவந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 361,434 தொகைக்கான திருப்பி செலுத்த வேண்டிய 04 வைப்பு மீதிகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 56,267,658 தொகைக்கான 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதுள்ளது.

**1.3.6 இணக்கமின்மைகள்**

**1.3.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 143 | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புப் பேரேடு மாதாந்தம் கூட்டப்பட்டு பிரதான பேரேட்டு கணக்குடன் சீராக்கல் செய்திருக்க வில்லை. |
| (ii) விதி 212 | இருப்பு பதிவேட்டில் பெறுகைகள் பதிவு செய்யும் போது கொடுப்பனவு உறுதிச் சான்று இலக்கங்கள் மற்றும் திகதிகள் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. |
| (iii) விதி 213 | களஞ்சியத்திலிருந்து பண்டங்கள் வழங்கும் போது சபை செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காக சமர்பிக்கப்படாத செல்லுபடியாகும் காலம் முடிவடைந்துள்ள கூட்டுத்தொகை ரூபா 41,453 தொகைக்கான 16 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |
| (இ) 2014/3(i) மற்றும் 2014/3(i) இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | சிட்டைகளில் மீளளிப்பு செய்யாமல் சமூக அபிவிருத்தி பெண் உத்தியோகத்தருக்கு ஆண்டின் போது தொலைபேசி கட்டணமாக ரூபா 18,750 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1992 பெப்ரவரி 26 திகதிய 05/01/119/ச(ix) இலக்கம் கொண்ட அறிவுரைக் கடிதம் | திட்டக் குழுவின் கொடுப்பனவுகள் செலுத்துவதற்காக 02 மணித்தியாலங்களை விட கூடுதலான காலம் கடமை நேரத்திற்கு புறம்பாக செயற்பட வேண்டுமெனினும், அதற்கு பொருத்தமற்ற முறையில் ரூபா 51,750 தொகையொன்று 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்தது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,773,619 தொகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,636,949 ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) பொதுக் கணக்கில் வைப்புச் செய்திருந்த ரூபா 15,910 இற்கான தொகையொன்று மீளாய்வாண்டு இறுதிவரை தேறி இருக்காததுடன், அது தொடர்பாக பரிசோதனை செய்திருக்கவில்லை.

(ஆ) கருவா இல்லம் நீர்த் திட்டத்திற்குரிய வருமானம் சேகரிக்கும் கணக்கில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,433,370 இற்கான தொகை நிலையான வைப்புக் கணக்கு ஒன்றில் முதலீடு செய்து வருமானம் உழைப்பதற்குத் தேவையானகள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,032,500 | 1,579,059 | 1,416,768 | 1,098,593 | 422,500 | 1,048,155 | 856,363 | 936,302 |
| வாடகை | 6,078,586 | 5,973,118 | 5,846,340 | 494,010 | 5,430,885 | 5,166,564 | 5,025,462 | 367,232 |
| அனுமதிப்பத் திரக் கட்டணம் | 789,000 | 378,910 | 373,560 | 11,050 | 961,000 | 758,725 | 753,025 | 5,700 |
| ஏனைய வருமானங்கள் | 8,023,550 | 11,270,260 | 7,831,657 | 14,036,728 | 34,334,002 | 11,471,175 | 6,860,712 | 10,598,125 |
| மொத்தம் | 15,923,636 | 19,201,347 | 15,468,325 | 15,640,381 | 41,148,387 | 18,444,619 | 13,495,562 | 11,907,359 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 15,923,636 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 19,201,347 ஆக காணப்பட்டது. ரூபா 11,907,359 தொகையான ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 31,108,706 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 15,468,325 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 15,640,381 ஆக காணப்பட்டது.

### 2.3.3 வீதவரியும் வரியும்

#### (அ) வீதவரி

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 673,385 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 1,048,097 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடல் உடன் ரூபா 1,721,482 தொகை அறவிடப்படவேண்டியிருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 891,776 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 829,706 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

#### (ஆ) ஏக்கர் வரி

ஆரம்ப நிலுவை ரூபா 49,630 தொகையாக காணப்பட்டதுடன், சிட்டையிடல் ரூபா 7,100 தொகையுடன் ரூபா 56,730 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 9,130 தொகையாக காணப்படாமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 47,600 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

#### (இ) நீர்வரி

ஆரம்ப நிலுவை ரூபா 344,970 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ஆண்டின் போது ரூபா 1,047,732 தொகை அறவிடப்படவேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 470,692 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 577,040 தொகை நிலுவையாக காணப்பட்டது.

### 2.3.4 வாடகை

ஆரம்ப நிலுவை ரூபா 374,927 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 2,301,575 தொகையான சிட்டையிடலுடன் ரூபா 2,676,502 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 2,174,797 ஆகக் காணப்படாமையினால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 501,705 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,486,304 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 10,600,848 தொகை ஆகும்.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை (output) பெற்றுக்கொள்ளப்படாமை**

மீளாய்வாண்டு பாதீட்டின் பிரகாரம் சபை நிதியத்தில் இருந்து 29 அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 662,000 தொகைக்கான ஒரு வேலைத்திட்டம் மாத்திரம் செயற்படுத்தியிருந்தது.

**(ஆ) எதிர்பார்ககப்பட்ட நலன்கள் (outcome) பெற்றுக் கொள்ளப்படாமை**

சுற்றாடல் அமைச்சின் ஏற்பாடுகளின் மீது சுற்றாடல் வீதியொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 2,900,000 இற்கான ஏற்பாடுகள் வழங்கியிருந்த போதிலும் குறிப்பிட்ட நிர்மாண வேலையின் வழித்தளம் ஒன்று மாத்திரம் நிர்மாணிப்பதற்காக ரூபா 1,998,229 தொகை 2017 பெப்ரவரி 22 திகதி செலவிடப்பட்டிருந்தது. மீதிப் பணம் உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. சுற்றாடல் வீதி நிர்மாணிக்கப்பட்ட இடம் உலாவு வழித்தளம் ஒன்றாகப் பயன்படுத்த முடியாதிருந்ததுடன், பாதையின் நீர் வழிந்தோடுவதற்கு தடையாகவுள்ளது. இதன் காரணமாக நிர்மாண வேலையின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோளுக்கு பயன்படுத்தமுடியாதிருந்தது.

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக சேதனப் பசளை உற்பத்தி செயற்களம் ஒன்று நிர்மணிப்பதற்காக 2012 ஆண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 1,000,000 தொகை செலுத்தி காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இந்த நிரமாண வேலையை நிறைவேற்றுவதற்காக 2016 ஆண்டின் போது ரூபா 9,411,898 இற்கான ஏற்பாடு அங்கீகரித்திருந்த போதிலும், 2017 வருட இறுதி வரையிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சேகரிக்கப்படும் குப்பைகள் வகைப்படுத்தப்படாமல் வெளியார் காணி ஒன்றில் குவிக்கப்பட்டு மண்போட்டு மூடப்படுகின்றது.

(iii) குப்பை சேகரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4,341,750 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் வருமானம் ஏதும் உழைப்பதற்கு சபைக்கு முடியாதிருந்தது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரழில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகளாவி சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

**(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகள் காணப்பட்ட 02 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 13 மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) வெளிக்கள மற்றும் சுகாதார தொழிலாளர் என சேர்க்கப்பட்டிருந்த 19 ஊழியர்களில் 10 பேர் உரிய கடமைகளுக்கு புறம்பாக அலுவலகத்தில் வேறு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டு சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரப் படி என ரூபா 1,538,384 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) திறைசேரி செயலாளரின் 3/2014 ஆம் இலக்க மற்றும் 25/2014 முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் 5 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு 2016 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 வரை ரூபா 1,412,508 இற்கான தொகையொன்று சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) ஊழியர் கடன்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஊழியர் கடன் மீதி ரூபா 4,882,131 தொகையாக காணப்பட்டதுடன், அம்மீதியில் 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் தவணைப்பணமும் வட்டியும் அறவிடப்படாமல் ரூபா 93,329 தொகை காணப்பட்டது.

## 3.3 செயற்பாட்டு திறமையின்மை

மீளாய்வாண்டின் போது வீதி விளக்குகள் பராமரிப்புக்காக ரூபா 315,090 இற்கான உபகரணங்கள் கொள்வனவு செய்து அவற்றில் ரூபா 219,850 இற்காக உபகரணங்களை மின் தொழில்நுட்பவியலாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. வீதி விளக்குகள் பராமரிப்பு தொடர்பாக சபையினால் மேற்பார்வை ஏதும் நடைபெற்றிருக்கவில்லை. பொருத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 103,185 இற்கான 09 வீதி விளக்கு தொகுதிகள் மற்றும் ரூபா 21,396 இற்கான உபகரணங்கள் பொருத்தப்படாமல் மின் தொழில்நுட்பவியலாளரின் பொறுப்பில் காணப்பட்டது. மின்சார சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த வீதி விளக்குத் தூண்கள் 102 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு இணக்கமின்றி 612 வீதி விளக்குத் தூண்கள் சபையினால் பராமரிக்கப்பட்டிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தாமை**

சபைக்கு கிடைத்திருந்த 02 காணிகள் பதிவேடுகளில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 விளைவற்ற / குறைவாக பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) காணிகள் மற்றும் கட்டிடங்கள்**

ரூபா 352,500 தொகை பெறுமதியான 07 காணிகள் மற்றும் கட்டிடங்கள் விளைவற்று மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) இயந்திரோபகரணங்கள்**

2010 மார்ச் 19 திகதி சபை நிதியத்தில் இருந்து கொள்வனவு செய்திருந்த ரூபா 130,862 தொகை பெறுமதியான துண்டு கல் இயந்திரம் மீளாண்வாண்டு இறுதி வரை பயன்படுத்தப்படாமல் செயற்படாது காணப்பட்டது.

**(இ) மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள்**

சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 470,000 தொகைக்கான 05 வாகனங்கள் 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் வாகனங்களை பழுதுபார்த்து ஓட்ட நிலைக்கு ஆக்குவதற்கு அல்லது கைதவரிப்பதற்கு நடடிவக்கை எடுத்திருக்கவில்லை.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மகநெகும கிராமிய பாதைகள் அபிவிருத்தி வேலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தனியார் வீடு ஒன்றிற்கு செல்வதற்காக மாத்திரம் ரூபா 488,931 தொகை செலவிடப்பட்டு பாதையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வறிய குடும்பங்கள் அனேகமாக வசிக்கும் பிரதேச மக்களின் நிதித் தேவைகள் மற்றும் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன், 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,281,032 தொகை செலவிடப்பட்டு சட்டிகள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றினை அபிவிருத்தி செய்திருந்த போதிலும் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பாரத்த குறிக்கோள்கள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 06 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 5,499,980 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதிகள் 02 சதவீதம் முதல் 59 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) மேலும் 02 செலவு விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 124,867 ஆக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 02 சதவீதம் முதல் 52 வரை வீச்சில் காணப்பட்டது.

(இ) 03 வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 3,347,157 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதிகள் 02 சதவீதம் முதல் 09 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

## 4.2 உள்ளக கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 134 இன் உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் கலந்துரையாடி இணக்கத்தை பெற்றிருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 ஜூன் 09 திகதி DMA/2009(i) இலக்கம் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமானம் சேகரித்தல்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) கணக்கீடு